எண்: 133/2025 நாள்: 30.09.2025

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## எண் 3, தேர்வாணையச் சாலை, சென்னை - 600 003.

## செய்தி வெளியீடு

ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகளில் (பட்டயப்படிப்பு மற்றும் தொழிற்பயிற்சி நிலை) (அறிவிக்கை எண். 10/2025) நேரடி நியமனத்திற்கான தேர்வுகள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 31.08.2025 மற்றும் 07.09.2025 முதல் 27.09.2025 வரை பல்வேறு நாட்களில் நடத்தப்பட்டன.

ஓ.எம்.ஆர் (OMR) வகைத் தேர்வாக 31.08.2025 அன்று நடைபெற்ற தமிழ் தகுதித் தேர்வு, திறனறிவு மற்றும் மனக்கணக்கு நுண்ணறிவு பாடத்திற்கான வினாத்தாள் மற்றும் அதற்கான தோராய விடைகள் தேர்வாணைய இணைய தளமான https://www.tnpsc.gov.in ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த உத்தேச விடைகளின் மீது முறையீடு செய்ய விரும்பும் தேர்வர்கள் உத்தேச விடைகள் வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஏழு நாட்களுக்குள் அதாவது 07.10.2025 அன்று மாலை 5.45 மணிக்குள் தேர்வாணைய இணையதளத்தில் உள்ள தேர்வுப்பலககையின் (Exam Dashboard) கீழ் "Answer key Challenge" என்ற சாளரத்தைப் பயன்படுத்தி மட்டுமே முறையீடு செய்யலாம். இதற்கான அறிவுரைகள், வழிமுறைகள் தேர்வாணைய இணையதளத்திலேயே வழங்கப்பட்டுள்ளன. அஞ்சல் வழியாகவும் மின்னஞ்சல் வழியாகவும் பெறப்படும் முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இதர பாடங்களுக்கான, உத்தேச வினா விடைகள் விரைவில் வெளியிடப்படும்.

அ. சண்முக சுந்தரம், இ.ஆ.ப.,

தேர்வுக் கட்டுப்பாட்டுஅலுவலர்